<u>**சார்பு நீதிமன்றம், அரூர்**</u>

<u>**நாள் – 09.06.2026**</u>

**OS.152/2020**

**பி.வா.சா. திரு.அண்ணாதுரை**

**பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. இளங்கோவின் அப்பா அண்ணாமலை கவுண்டரும், எனது அபபா வெள்ளையக்கவுண்டரும் சகோதரர்கள் என்று சொன்னால் சரிதான். எனது அப்பா மூத்தவர், அண்ணாமலைக்கவுண்டர் இளையவர் என்றால் சரியல்ல, அண்ணாமலைக்கவுண்டர் மூத்தவர், எனது அப்பா இளையவர். இந்த வழக்கு சொத்து என்பது மொரசப்பட்டி கிராமம், சர்வே எண்.40/6B, 40/9 என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.40/6B ஐ ஒட்டி வடக்கு பக்கம் சர்வே எண். 40/8 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.40/8, 40/9 ஆகியவை பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். சர்வே எண்.40/6B என்பது கோபாலன் என்பவரிடம் இருந்து மாற்றிக்கொண்ட சொத்து அவ்வாறு மாற்றிக்கொண்டது பணம் கொடுத்து வாய்மொழியாக மாற்றிக்கொண்ட சொத்து என்றால் சரிதான்.

2. சர்வே எண்.40/6A1 என்பது எங்களுடைய பூர்வீக நிலம் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.40/6A1 நிலத்தை கோபாலனிடம் கொடுத்துவிட்டு சர்வே எண்.40/6B –ஐ பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். கோபாலனுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.40/6B ஒரு வரதகவுண்டர்

என்பவரிடம் இருந்து 25.07.1966ம் வருடம் விலைக்கு வாங்கியது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எங்களுக்குள் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது 1979 ல் என்றால் இல்லை, 1955லேயே ஆனது. 1955ல் இருந்தே அண்ணாமலைக்கவுண்டர் தனிக்குடும்பம், தனிவிவசாயம், வெள்ளையக்கவுண்டர் தனிக்குடும்பம், தனி விவசாயம் என்றால் சரிதான்.

3. சர்வே எண்.40/6B என்பது கோபாலக்கவுண்டருக்கு சொந்தமானது, சர்வே எண்.40/6A1 நிலத்தை அண்ணாமலைக்கவுண்டர்தான் கோபாலக்கவுண்டர் உடன் மாற்றிக்கொண்டார் என்றால் இருவரும் ஒன்றாக இருக்கும்போது அண்ணாமலைக்கவுண்டரும், வெள்ளையக்கவுண்டரும் சேர்ந்துதான் மாற்றிக்கொண்டார்கள். அப்படி என்றால் 1955க்கு முன்பாகவா என்றால் ஆமாம். சர்வே எண்.40/6B என்ற நிலத்துக்கும் எனக்கும் எங்கள் சகோதரர் மற்றும் எங்கள் குடும்பத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கோபாலன் என்பவருக்கும், அண்ணாமலை கவுண்டர் என்பவருக்கும் சர்வே எண்.40/6B சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு அது சம்பந்தமாக கிரிமினல் வழக்கு அரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் CC.No.141/1985 என்ற வழக்கு நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கிலேயே கோபால் கவுண்டர் வகையறா அக்கிரமம் செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் அத பற்றி எனக்கு தெரியாது. தாவொ சொத்தானது சர்வே எண்.40/6B அண்ணாமலைக்கவுண்டரும், கோபாலன் என்பவரும் வாய்மொழி

பரிவர்த்தனை மூலமாக மாற்றிக்கொள்ளப்பட்ட சொத்து என்று சொன்னால் இல்லை.

4. தாவா சர்வே எண்.40/9 என்பது நான் சொல்லும் வாய்மொழி பாகப்பிரிவினை மூலமாக அண்ணாமலை கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, அது எங்களுக்கு வந்த சொத்து. நான் சொல்லும் வாய்மொழி பாகப்பிரிவினைக்கு பிறகு சர்வே எண்.40/9–க்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, அந்த இடத்தில்தான் நான் வீடுகட்டி வசித்து வருகிறேன். சர்வே எண்.40/6B–க்கு வடக்கே சர்வே எண்.40/8 உள்ளது, அந்த சர்வே எண்.40/8–க்கான பட்டா, சிட்டா எல்லாம் எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 40/8 ல் உள்ள சொத்து வாய்மொழி பாகம் மூலமாக எனது அப்பாவிற்கு வந்த சொத்து என்றால் சரிதான். எனது சகோதரர்களுக்குள் 21.05.2018ம் தேதி ஆவணம் எண்.772/2018 என்ற ஆவணம் அண்ணாதுரை, குணசேகரன், பத்மா, ஜெகதீசன் ஆகியோர் சேர்ந்து பாகம் செய்துகொண்ட பாகப்பிரிவினை ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் அண்ணாதுரையான எனக்கு A செட்யூல் சொத்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் சர்வே எண்.40/8, புஞ்சை ஏக்கர் 0.07.5 என்ற நிலம் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் செய்துகொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா சர்வே எண்.40/6B, சர்வே எண்.40/9 ஆகிய நிலங்கள் சொல்லப்படவில்லை, யாருக்கும் கொடுக்கப்படவில்லை

என்று சொன்னால் சரிதான். தாவா சர்வே எண்.40/6B மற்றும் சர்வே எண்.40/8–ஐ ஒட்டி கிழக்கு பக்கம் மொரசப்பட்டி கிராமம் உள்ளது என்றால் சரிதான்.

5. நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட பட்டாவில் சர்வே எண்.40/6B, சர்வே எண்.40/9, சர்வே எண்.40/8 ஆகியவை எனது அப்பா வெள்ளையக்கவுண்டர் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பட்டா கொடுத்தது தவறு என்று வாதியின் அப்பா அண்ணாமலைக்கவுண்டர் அரூர் தாசில்தாரிடம் மனுகொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் அப்படி எதுவும் நடக்கவில்லை. அவ்வாறு தாசில்தார் எங்களிடமும், ஊரிலும் விசாரணை செய்து விசாரணையின் முடிவில் சர்வே எண்.40/9 வாய்மொழிபாகத்தின்படி அண்ணாமலைக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும், சர்வே எண்.40/8 எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்டது என்றும், சர்வே எண்.40/6B அண்ணாமலைக்கவுண்டருக்கு கோபாலன் சொத்தை மாற்றிக்கொண்டதன் மூலம் அண்ணாமலைக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும் பட்டாவை மாற்றி 15.05.1995ல் உத்தரவு போட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் எங்கள் நிலத்தை அவர்கள் பெயரில் மாற்றி விட்டதாக VAO சொன்னார். எப்போது அவ்வாறு VAO என்னிடம் சொன்னார் என்றால் 15.05.1995ல் இருந்து ஓரிரு மாதத்திலேயே சொன்னார்.

6. எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 2015ல். எனது அப்பா இறக்கும்வரை எங்களுடைய குடும்ப சொத்துக்களை அவர்தான் நிர்வாகம்

செய்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி தாசிர்தார் 15.05.1995ல் உத்தரவிட்டதற்கு மேல் நாங்கள் RDO விடம் மேல்முறையீட்டு மனு கொடுத்தோம் அதில் தாசில்தார் உத்தரவு இறுதி செய்யப்பட்டது என்றால் சரிதான். RDO உத்தரவிற்கு மேல் DRO விடம் மேல்முறையீட்டு மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி DROவும் RDO, தாசில்தார் உத்தரவு சரி என்று சொல்லிவிட்டார். அதன்பிறகு மேல்முறையீடு எதுவும் நிலநிர்வாக ஆணையாளரிடம் செல்லவில்லை என்றால் சரிதான்.

7. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்து இந்த வழக்கிற்காக நான் தயாரித்து தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்துக்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது வாதி இளங்கோவனுக்கு 11.03.2020ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரம் 415/2020ன் படி பாத்தியப்பட்டது, அவர்தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.09 17:19:32 +0530